தினமணி 07.09.2025

# சமுதாயக்கூடம் கட்டுவதற்கு டிஎன்பிஎல் ரூ.40 லட்சம் நிதி

கரூர், செப்.6: புஞ்சைத்தோட்டக்குறிச்சி பேரூராட்சி பகுதியில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு டிஎன்பிஎல் ஆலை சார்பில் ரூ. 40 லட்சம் நிதியுதவி சனிக்கிழமை வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம், புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புஞ்சைத் தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குள்பட்ட கோவிந்தம்பாளையம் கிராமத்தில் பொது மக்களின் பயன்பாட்டுக்காக சமுதாயக்கூடம் கட்டுவதற்காக ரூ. 40 லட்சத்துக்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை ஆலை வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஆலையின் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன் தலைமைவகித்து, நிதியுதவிக்கான காசோலையை புஞ்சைத்தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் சி.ரூபாவிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் ஆலை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



புஞ்சைத்தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கான நிதியுதவிக்கான காசோலையை பேரூராட்சித் தலைவர் ரூபாவிடம் சனிக்கிழமை வழங்கிய ஆலையின் முதன்மை பொதுமேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன்.

## மாலை மலர் 07.09.2025



சமுதாயக்கூடம் கட்டுவதற்காக ரூ. 40 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் ரூபாவிடம் வழங்கிய போது எடுத்த படம்.

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

# புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்கு சமுதாயக்கூடம் கட்ட ரூ.40 லட்சம் நிதி

வேலாயுதம்பாளையம், செப்.7—

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்பு பாளையம், நஞ்சை புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பினை மேம்படுத்திடவும், பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகளைச் செய்து வருகிறது.

இந்நிலையில் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட கோவிந்தம்பாளையம் பகுதியில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக சமுதாயக்கூடம் கட்டுவதற்காக ரூ. 40 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் ரூபா விடம் வழங்கினார்.

காலைக்கதிர் 07.09.2025

# டி.என்.பி.எல்., சார்பில் ரூ.40 லட்சம் நிதி உதவி

**கரூர், செப். 4**

புஞ்சைத்தோட்டக்குறிச்சி டவுன் பஞ்.,ல் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு டி.என்.பி.எல்., ஆலை சார்பில், 40 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம், புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தில், சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில், முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் தலைமை வகித்தார். புஞ்சை தோட்டக்குறிச்சி டவுன் பஞ்.,க்குட்பட்ட கோவிந்தம்பாளையம் கிராமத்தில் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக சமுதாயக்கூடம் கட்டுவதற்காக, 40 லட்சம் ரூபாய்க்கான காசோலை புஞ்சைத்தோட்டக்குறிச்சி டவுன் பஞ்., தலைவர் ரூபாவிடம் வழங்கினார்.

தினமலர் 12.09.2025

# சமுதாயக்கூடம் கட்ட ரூ.40 லட்சம் டிஎன்பிஎல் உதவி

வேலாயுதம்பாளையம்: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்(டிஎன்பிஎல்) தனது சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை. வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நஞ்சைபுகழூர் ஆகிய ஊராட்சி களின் கல்வி உட்கட்டமைப்பை மேம்படுத்த, பல்வேறு திட்டங்கள், உதவிகளைச் செய்து வரு கிறது. அந்த வகையில் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி கோவிந்தம்பாளையத்தில் சமுதாயக் கூடம் கட்ட ரூ.40 லட்சம் நிதி வழங்கி உள்ளது. அதற்கான காசோலையை நிறுவன முதன்மை பொது மேலாளர் கலைச்செல்வன் பேரூராட்சித் தலைவர் ரூபாவிடம் வழங்கினார்.